Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 357

சனிக்கிழமை 18 நவம்பர் 2023

கார்த்திகை 02 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# மாவீரர் நினைவேந்தல் தடை விதிக்க மறுப்பு

## பருத்தித்துறை நீதிமன்றம் அதிரடி

**யாழ்ப்பாணம், நவம்பர் 18**

**மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுக்குத் தடைவிதிக்குமாறு கோரி, வல்வெட்டித்துறை பொலிஸாரால் பருத்தித்துறை நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்ட நிலையில், அவ்வாறு தடைவிதிப்பதற்கு பருத்தித்துறை நீதிமன்றம் மறுப்புத் தெரிவித்துள்ளது.**

மாவீரர்களை நினைவேந்துவதற்கு தமிழர் தாயகம் தயாராகி வருகின்றது. தமிழர் தாயகத்தில் உள்ள மாவீரர் துயிலுமில்லங்களில் துப்புரவுப் பணிகள் அண்மைக்காலமாக முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், நினைவேந்தல் நிகழ்வுகளுக்குத் தடை விதிக்க பொலிஸ் மட்டத்தில் பல்வேறு நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன்படி, மாவீரர் அஞ்சலிக்குத் தடை விதிக்குமாறு கோரி வல்வெட்டித்துறைப் பொலிஸாரும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்த நிலையிலேயே, பொலிஸாரின் கோரிக்கைக்கு ஏற்ப தடைவிதிக்க மன்று மறுப்புத் தெரிவித்துள்ளது. (அ-ம-26)

## தவறுக்கு வருந்துகிறோம்

'உதயன்' பத்திரிகையின் நேற்றைய முதலாம் பக்கத்தின் தொடர்ச்சிகள் தொழில்நுட்பத் தவறு காரணமாக பிரசுரமாகவில்லை. அந்தச் செய்திகள் அனைத்தும் இன்றைய நான்காம் பக்கத்தில் முழுமையாக பிரசுரமாகியுள்ளன. தவறுக்கு 'உதயன்' வருந்துகிறான். இதை பொறுப்புடன் சுட்டிக்காட்டிய வாசகர்களுக்கும் நன்றிகள். (ஆ-ர்)

### சித்தி வீதத்தில்

## ஜோன் பொஸ்கோ யாழில் முதலிடம்!

யாழ்ப்பாணம், நவ. 18

புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில், வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று அதிக மாணவர்கள் சித்தியடைந்த பாடசாலையாக யாழ்ப்பாணம் ஜோன் பொஸ்கோ பாடசாலை பதிவாகியுள்ளது.

மேற்படி பாடசாலையில் இருந்து 234 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்த நிலையில், அவர்களில் 164 மாணவர்கள் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்றுச் சித்தியடைந்துள்ளனர். வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்ற »11

## பாம்பு தீண்டி ஒருவர் சாவு!

யாழ்ப்பாணம், நவ. 18

பாம்பு தீண்டிய குடும்பத்தலைவர் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தார். கைதடி மத்தி - கைதடியைச் சேர்ந்த அருச்சுனன் சுந்தரலிங்கம் (வயது- 55) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். »11

### மானிப்பாயில் மாவீரர் நினைவு

## தடைகோரினர் பொலிஸார் கட்டளை நவம்பர் 20இல்!

யாழ்ப்பாணம், நவ. 18

மாவீரர் வார நினைவேந்தலை மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தடை செய்யக்கோரி மானிப்பாய் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் தொடர்பான கட்டளை நவம்பர் மாதம் 20 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது. நவம்பர் 27ஆம் திகதி, மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வலி. தென்மேற்கு பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் மற்றும் வலி. தென்மேற்கு பிரதேசசபை உறுப்பினர்களால் மாவீரர் நினைவேந்தல் முன்னெடுக்கப்படலாம் என்றும் அதற்குத் தடைவிதிக்குமாறு கோரியும் மல்லாகம் நீதிமன்றத்தில் மானிப்பாய் பொலிஸாரால் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பான »11

## புலமைப்பரிசில் பரீட்சை 50,664 மாணவர்கள் சித்தி!

கொழும்பு, நவ. 18

2023 தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய 3 இலட்சத்து 32 ஆயிரத்து 949 மாணவர்களுள் 50 ஆயிரத்து 664 பேர் வெட்டுப்புள்ளிக்குமேல் பெற்று சித்தியடைந்துள்ளனர்- என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பரீட்சையில் முதல் 10 இடங்களைப் பிடித்த மாணவர்களுள் முதல் ஐந்து இடங்களுக்குத் தேர்வானவர்கள் 198 புள்ளிகளைப் பெற்றுள்ளனர். 197 புள்ளிகளைப் பெற்ற நால்வர் இருக்கின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-ம-44)

## இன்று சூரசம்ஹாரம்

யாழ்ப்பாணம், நவ. 18

கந்தசஷ்டி விரதத்தின் முக்கியமான உற்சவமான சூரன்போர் முருகன் ஆலயங்களில் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் கந்தசஷ்டி விரதகாலப் பகுதியின் முக்கியமான உற்சவமான சூரசம்ஹார உற்சவம் இன்று சனிக்கிழமை மாலை நடைபெறவுள்ளது. இன்றைய உற்சவத்தில் சாயரட்சைப் பூசை பி.ப. 3.30 மணிக்கும், இரண்டாம் காலச் சந்திப் »11

### ராஜபக்சக்களின்

## குடியுரிமையைப் பறிப்பதற்கு உடன் நடவடிக்கை தேவை!

### சஜித் பிரேமதாஸ வலியுறுத்து



கொழும்பு, நவ. 18

நாட்டின் பொருளாதாரம் வங்குரோத்து அடைவதற்குக் காரணமாக இருந்த மஹிந்த ராஜபக்ச, கோத்தாபய ராஜபக்ச, பஸில் ராஜபக்ச உள்ளிட்டவர்களின் குடியுரிமை பறிக்கப்படவேண்டும். இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக விசேட ஜனாதிபதி குழுவை அமைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம், எதிர்க் »11

## பாதீடு வென்றால் மட்டுமே ஐ.எம்.எப். நிதி வழங்கும்!

### 'செக்' வைக்கிறார் பந்துல



கொழும்பு, நவ. 18

2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் வெற்றி பெற்றால் தான் சர்வதேச நாணய நிதியம் இரண்டாம் கட்ட நிதியை விடுவிக்கும். சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்றிட்டங்கள் தோல்வியடைந்தால் இலங்கை பொருளாதார ரீதியில் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்படும். இதுவே உண்மை - இவ்வாறு தெரிவித்தார் அமைச்சர் »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் வழங்குநர்களாக இளையோர் உயருங்கள்!



## வடக்கு ஆளுநர் அறிவுரை

யாழ்ப்பாணம், நவ. 18

**வடக்கு மாகாண இளையோர்கள் மருத்துவராக, பொறியியலாளராக வரவேண்டும் என கனவு காணுவதைவிட கைத்தொழில் புரட்சிக்கு சவால் விடும் வகையில் தேசிய, சர்வதேச அளவுகளில் பல தொழில் முனைவோர்களாக - தொழில் வழங்குநர்களாக மாறவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ். எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின்கீழ் இயங்குகின்ற மகளிர் அபிவிருத்தி நிலையங்களில் மனைப்பொருளியல் டிப்ளோமா பாடநெறியை முடித்த மாணவிகளுக்கு என்.வி.கியூ. 4 தரச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்றது. இந்தநிகழ்வில் பிரதமவிருந்தினராக பங்கேற்று உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் பல்கலைக்கழகங்களிலே பெற்றுக்கொள்கின்ற பட்டங்கள் அனைத்தும் எங்களுக்குத் தொழில் தகைமையைத் தருவதில்லை. அவற்றில் பெரும்பாலானவை கல்வித்தகைமையை மட்டுமே எங்களுக்குத் தருகின்றன. அந்தத் தகைமைகளோடு தொழில் தலைமை தேடுவது என்பது முயற்கொம்பான ஒரு விடயம்.

அதற்காகத்தான் அரசாங்கம் பல்வேறு வகைகளிலே தொழில்நுட்ப கல்விகளின் ஊடாக என்.வீ.கியூ. என்கின்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இன்று நாட்டில் ஏற்பட்டுவரும் கைத்தொழில் புரட்சியின் ஊடாகப் பல்வேறு சர்வதேச நிறுவனங்கள் முதலீடுகளை இங்கு முதலிட ஆரம்பித்துள்ளன. அந்த நிறுவனங்களில் வேலைக்குச் சேர்வதாயின் எங்களுக்குத் தொழிற்தகைமைவேண்டும்.

அந்தவகையில் வாழ்க்கைக்குத் தேவையான தொழில் தகைமையைப் பெற்றுக் கொள்வதற்கான வழிவகைகளை நோக்கி இளையோர் பயணிக்கவேண்டும்.

தேசிய, சர்வதேச அளவுகளில் தொழில் முனைவோர்களாகவும் - தொழில் வழங்குநர்களாகவும்- உருவெடுக்கவேண்டும்- என்றார். (ச-26-125)



# டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 18

வட மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் நடத்தப்படும் மனைப்பொருளியல் டிப்ளோமா சான்றிதழ் பயிற்சிநெறியை பூர்த்தி செய்த 257 மாணவிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், வட மாகாண பிரதம செயலாளர், வட மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர், ஏனைய திணைக்களங்களின் தலைவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ரி-100)

# முதியவர் சடலமாக மீட்பு!

வடமராட்சி, கம்பர்மலை பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து முதியவர் ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அணியத்திடல், கம்பர்மலையைச் சேர்ந்த அழகரத்தினம் செல்வராசா (வயது -73) என்ற முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் அவர் காணாமற்போயிருந்த நிலையிலேயே, கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சம்பவ இடத்துக்குச் சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டார். (அ-ம-100)

# இருளில் மூழ்கும் சங்குப்பிட்டிப்பாலம்

சாவகச்சேரி, நவ. 18

சுற்றுலாத் தலங்களில் ஒன்றான பூநகரி சங்குப்பிட்டிப் பாலம் பல மாதங்களாக இருளில் காணப்படுகிறது.

நூற்றுக்கணக்கான சூரிய மின்கலங்களினூடாக தன்னியக்கமாகவே இரவு வேளையில் ஒளிரக்கூடியதாக மின்விளக்குகள் பொருத்தப்பட்டு அழகுறக் காணப்பட்ட பாலம் பல மாதங்களாக கவனிப்பாரற்ற நிலையில் இருளில் மூழ்கியுள்ளது.

இது மாலை வேளைகளில் அழகுற இருந்தபோது உள்ளூர், வெளியூர் சுற்றுலாவிகள் அதிகமாகச் சென்று பார்வையிட்டிருந்தனர். தற்போது சுற்றுலாவிகளின் வரவும் குறைந்துள்ளதோடு பாலம் துருப்பிடித்தும் காப்பற்றும் கழன்றும் பழுதடைந்து காணப்படுகின்றது. (ஒ-9)



# வவு.வில் மாடு கடத்தல் சந்தேகநபர்கள் கைது

வவுனியா, நவ. 18

வவுனியாவில் சட்டவிரோதமான முறையில் மாடுகளைக் கடத்திச் சென்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

மடுக்கந்தை பகுதியிலிருந்து வவுனியா நகர் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த சிறியரக லொறி ஒன்றை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வழிமறித்து அதிரடிப் படையினர் சோதனையிட்டபோது அனுமதிப்பத்திரமின்றி மாடுகளை கடத்திச் சென்றமை தெரியவந்தது.

இதன்போது 8 பசுமாடுகள் உட்பட 14 மாடுகள் மீட்கப்பட்டதுடன் கடத்திச் செல்லப் பயன்படுத்தப்பட்ட லொறியும் கையகப்படுத்தப்பட்டது.

கைதுசெய்யப்பட்டவர்களை நீதிமன்ற நடவடிக்கைக்குட்படுத்த வவுனியா பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-18)

# தொழிற்தகைமை கற்கைக்கு சலுகையாகக் கொடுப்பனவு

## சமன் பந்துலசேன தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 18

வடக்கு மாகாணத்தில் ஊழியர் சேமலாப நிதி பெறும் பெற்றோரின் 2022 ஆம் ஆண்டு க.பொ.த.உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றி கல்வியைத் தொடரமுடியாத பிள்ளைகள் இருப்பின் அவர்கள் தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ் கற்கைநெறியைத் தொடர்வதற்கு 25 ஆயிரம் ரூபா வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண பிரதம செயலர் சமன்பந்துலசேன தெரிவித்தார்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை வடமாகாண பிரதம செயலகத்தின் இணையத்தளத்தினூடாகப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். சாதாரண தர, உயர்தர சித்தி பெற்றுப் பல்கலைக்கழகம் அடையமுடியாவிட்டாலும் அந்தக் கனவை நீங்கள் தேசிய தொழில் தகைமைச் சான்றிதழூடாகப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார். (ச-125)

# பட்ஜெட் கருத்துகளுக்கு குறைகேள் அலுவலகமாம்

## வஜிர தெரிவிப்பு

வரவு - செலவுத் திட்ட அலுவலகம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. மாற்றுத் திட்டங்கள் இருந்தால் குறித்த அலுவலகத்திடம் யோசனைகளை முன்வைக்கலாம். மாறாக பட்ஜெட் அறிக்கையை விமர்சித்து மோதிக் கொள்ளாதீர்கள் -இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன, நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் 2ஆம் வாசிப்புமீதான விவாதத்தில் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தொழிற்சங்கங்களின் போராட்டங்களால் நாட்டுக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. சம்பளத்தை அதிகரித்தால், மின்சாரக் கட்டணத்தைக் குறைக்குமாறு போராடுவார்கள். மின்சாரக் கட்டணத்தைக் குறைத்தால் சம்பளத்தை அதிகரிக்குமாறு போராட்டம் நடத்துவார்கள். வங்குரோத்தடைந்துள்ள நாட்டில் பெரும் சவால்கள் உள்ளன என்பதை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும். - என்றார். (அ-ச-44)

# மாவட்ட, பிரதேச செயலர்களுக்கு நலன்புரி வலுப்படுத்தல் பதவிகள்

பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நோக்கில் மாவட்டச் செயலர்கள் மற்றும் பிரதேச செயலர்கள் ஆகியோருக்கு மேலதிக பதவிகள் வழங்கப்படவுள்ளன என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அதன்படி மாவட்டச் செயலர்களுக்கு மேலதிக நலன்புரி ஆணையாளர் பதவியும் பிரதேச செயலாளர்களுக்கு பிரதி நலன்புரி ஆணையாளர் பதவியும் வழங்கப்பட்டுள்ளன.

அனைத்துப் பிரதேச செயலாளர்களுக்கும் இம்மாதம் முதலாம் திகதி முதல் பிரதி நலன்புரி ஆணையாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

தேசியக் கொள்கைகள் ஊடாக பொருளாதார ஸ்திரத்தன்மையை வலுப்படுத்தும் நோக்குடன் நலன்புரிச் சட்டத்தின் கீழ் இந்தப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்முதல் செய்வது ரூ. 300 விற்பனை செய்வதோ ரூ. 275

## சீனி விற்பனையாளர்கள் ஆதங்கம்

கொழும்பு, நவ. 18

**கொழும்பில் மொத்தச் சீனி இறக்குமதியாளர்களிடமிருந்து ஒரு கிலோ சீனியை 300 ரூபாவுக்குக் கொள்வனவு செய்து, கட்டுப்பாட்டு விலையான 275 ரூபாவுக்கு எவ்வாறு விற்பனை செய்யமுடியும் என்று வர்த்தகர்கள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.**

இதுதொடர்பில் வவுனியா வர்த்தகர்கள் தெரிவிக்கையில்.

தற்போது ஒரு கிலோகிராம் சீனிக்கு கட்டுப்பாட்டு விலையாக 275 ரூபா நிர்ணயிக்கப்பட்டு அரச வர்த்தகமானி வெளியிடப்பட்டுள்ளது.

கொழும்பில் மொத்தச் சீனி இறக்குமதியாளர்களிடம் ஒருகிலோ கிராம் சீனி 300 ரூபாவுக்கு கொள்வனவு செய்து. இங்குள்ள வர்த்தக நிலையங்களுக்கு எடுத்து வந்து கட்டுப்பாட்டு விலையான 275 ரூபாவுக்கு எவ்வாறு விற்பனை செய்ய முடியும்? எனவே கொழும்பு இறக்குமதியாளர்களிடமிருந்து சீனியை கட்டுப்பாட்டு விலையில் பெற்றுக் கொள்வதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ச)

## விரைவில் ஓய்வூதியம்

ஓய்வு பெற்றுச்செல்லும் அரச ஊழியர்களின் ஓய்வூதியப் பணத்தை அவர்கள் ஓய்வுபெற்றுச் செல்லும் இருவாரங்களில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்துள்ளார். தற்போது ஓய்வுபெற்றுச் செல்லும் அரச ஊழியர்களுக்கு ஓய்வூதியம் மூன்று மாதங்களில் வழங்கப்படுகிறது. இந்தநிலையில் அதனை இரண்டு அல்லது ஒருவாரத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-6)

## வேலணையில் மிதிவெடி மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 18

வேலணை சரவணையில் மிதிவெடி ஒன்று கடந்தசெவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டுள்ளது

சந்தேகத்துக்கிடமான முறையில் பொதுக் காணியொன்றினுள் காணப்பட்ட பொருள் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மிதிவெடி என அடையாளம் கண்டு அதனை மீட்க நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஒ-125)

## வெள்ளத்தில் மூழ்கும் வீதி அவஸ்தைப்படும் மக்கள்



முறையான வடிகாலமைப்பு இல்லாமையால் மழை காலங்களில் சுழிபுரம் பெரியதம்பிரான் வீதி முழுமையாக வெள்ளத்தில் மூழ்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் மழை காலத்தில் இந்த நிலைமை நீடிப்பதாகவும் இதைத் தீர்த்து வைப்பதற்கு வலிகாமம் மேற்கு பிரதேசசபை நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

பாண்டவெட்டை, காட்டுப்புலம், வறுத்தோலை, இறாத்தலடி உட்படப் பல பகுதிகளுக்கு இந்த வீதியே பிரதானமாகக் காணப்படுகின்றது. பாடசாலை மாணவர்களும் அதிகளவில் இந்த வீதியையே பயன்படுத்துகின்றனர். அவர்களின் புத்தகப்பைகள் நனையும் அளவுக்கு வீதியில் வெள்ளம் தேங்கி நிற்கின்றது. இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-125)

## நடுவழியில் பரிதவிக்கும் பயணிகள்; கட்டைக்காடு வழித்தடத்தில் அவலம்!

பருத்தித்துறை கட்டைக்காடு வழித்தடத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வரும் அரச பேருந்து பழுதடைந்து நடுவழியில் நிற்பதனால் அதில் பயணம் செய்யும் பயணிகள் தொடர்ந்தும் அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

பருத்தித்துறை வழித்தடத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை புறப்பட்ட பேருந்து பழுதடைந்து நடுவழியில் நின்றது. இதனால் அரச உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பொதுமக்கள் உள்ளிட்டோர் பயணத்தைத் தொடர முடியாது சிரமத்துக்குள்ளாகினர். இது தொடர்பில் பேருந்துச் சாரதி மற்றும் நடத்துனரால் பருத்தித்துறைசாலை நிர்வாகத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

இதையடுத்து பருத்தித்துறைசாலையிலிருந்து மாற்று பேருந்து அனுப்பிவைக்கப்பட்டிருந்த நிலையில் அப்பேருந்தை கூட பொது மக்கள் தள்ளியே இயங்கவைத்து பயணத்தைத் தொடரும் அவலம் ஏற்பட்டிருந்தது. வழித்தடத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வரும் பருத்தித்துறைசாலைக்குச் சொந்தமான அரச பேருந்தானது சேவையில் ஈடுபடும் போது பழுதடைந்து நடுவழியில் நிற்பதும் பின்னர் மாற்று பேருந்து அனுப்பப்பட்டு பயணத்தைத் தொடர்வதும் அடிக்கடி நிகழ்ந்து வருகிறது.

குறித்த விடயம் பற்றித் தொடர்ச்சியாக பலதரப்பட்ட பொறுப்பு வாய்ந்தவர்களுக்குத் தெரியப்படுத்தியும் இதுவரை சீர்செய்யப்படாதுள்ளமை தொடர்பில் வடமராட்சி கிழக்கு மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ஒ-100)

## குடியிருக்காத வீட்டுக்குள் போதைப்பொருள் பாவனை

### நால்வர் கைது

மன்னார், நவ. 18

மன்னார் உதயபுரம் பகுதியில் பாவனையற்ற வீட்டில் வைத்துப் போதைப்பாவனையில் ஈடுபட்ட நான்கு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போதே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 52 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-60)

## ப தினம் தெரியுமோ?

நேற்றைக்கு ஒரு பள்ளிக்கூடத்து ஆசிரியர் தின டான்ஸையும் அதுக்காக கொதிச்செழும்பினது சரியோ எண்டும் பட்சி சொல்லியிருந்தது. இண்டைக்கும் கிட்டத்தட்ட அதேமாதிரி ஒரு விசயம் தான். ஆனால் இது எங்கட இனத்தையும், பண்பாட்டையும் கேவலப்படுத்தின ஒராளைப் பற்றினது.

எப்பிடி கொக்குவில் பள்ளிக்கூடத்தில ஆசிரியர் தினத்துக்கு ரீச்சர்மார் டான்ஸ் ஆடிச்சினமோ, அதேமாதிரி கிழக்கில முஸ்லிம் பள்ளிக்கூடம் ஒண்டில ஒரு மாஸ்ரர் தனிநடனம் ஆடியிருக்கிறார். அதுவும் பரத நாட்டிய ஸ்ரைல்ல கொஞ்ச அபிநயங்களையும், சினிமாப்பட ஆட்டத்தையும் சேர்த்து அவர் ஆடியிருக்கிறார். அவ்வளவுதான். 'இப்படி எங்கட கலாசாரத்தைச் சீரழிக்கிறான். உதுஹராம் (விலக்கப்பட்ட செயல்). பரத்தையள் தான் பரத நாட்டியம் ஆடுறது. அப்பிடி ஆடி, இஸ்லாம் மார்க்கத்தை கேவலப்படுத்தாதை' எண்டு அரைகுறை அறிவுள்ள மௌலவி ஒராள் வீடியோ விட்டிருக்கிறார். அதை முஸ்லிம் ஆக்கள் கனபேர் பேஸ்புக்கில காவிக்கொண்டும் திரியினம்.

பரத முனிவரில இருந்து வந்ததாலதான் அதுக்குப் பரத நடனம் எண்டு பேரே தவிர, பரத்தையள் ஆடினதால அப்பிடிப் பேர் வரேலை எண்டது அந்த மௌலவிக்கு தெரியேலைப் போல. இதுவே ஏதும் முஸ்லிம்களின்ர கலையைப் பற்றி எங்கட ஆக்கள் ஆரும் கேவலப்படுத்தியிருந்தா இப்ப எல்லாப் பள்ளிவாசல்காரரும் கொடுக்கைக் கட்டிக்கொண்டு றோட்டில இறங்கி சன்னதம் ஆடியிருப்பினம். ஆனால் எங்கட ஆக்களுக்குத் தான் ரோசநரம்பு பெரிசா இல்லையே. கிழக்கில உள்ள விபுலானந்தா அழகியல் கல்லூரிக்காரர் மாத்திரம் ஒரு கண்டனப் போராட்டம் செய்தவை. வடக்கில இருக்கிற அக்கடமியள், கம்பஸ்காரர், நடனப்பள்ளியள் வைச்சிருக்கிறவை எல்லாரும் மூச்சுக்கூடக் காட்டேலை. இப்பிடி நாங்கள் பேசாமல் விட்டுத்தான் இப்ப காணான் கோணான் எல்லாம் எங்கட கலையளைப் பற்றி வாய்க்கு வந்ததை உளறிக்கொண்டு இருக்கினம்.

பரதநாட்டியம் 'சிருங்காரம்' எண்டு ஒரு உணர்ச்சியை மட்டும் சொல்லேலை. 9 உணர்ச்சியளைப் பற்றி அது சொல்லியிருக்கு. ரௌத்திரமும் (கோபம்) அதில ஒண்டு. கொஞ்சமெண்டாலும் எங்கட ஆக்கள் உந்த ரௌத்திரத்தக் காட்டினால் நல்லது. இல்லாட்டி 'பரத்தை ஆடினது தான் பரத நாட்டியம்' எண்டு அவங்கள் சொன்னதை பிற்காலத்தில வாறவை உண்மையெண்டு நம்பினாலும் நம்பிடுவினம். அதுக்காகவாவது ஏதும் செய்யத்தான் வேணும். ஆர் பூனைக்கு மணி கட்டப் போயினம்?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு - கிழக்கு

# பல்கலைக்கழகங்களில் மூளைச் சலவையாம்!

## பதறுகின்றார் சரத் வீரசேகர

கொழும்பு, நவம்பர் 18

**அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் மாகாணசபைகளுக்கு பல்கலைக்கழகம் ஆரம்பிப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளமை பயங்கரமானதாகும். பாதீட்டில் உள்ள இந்த முன்மொழிவுக்கு உடன்பட முடியாது - என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் 2ஆம் வாசிப்புமீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'பாதீட்டில் உள்ள முன்மொழிவுகளுள் என்னால் உடன்பட முடியாத சில விடயங்களும் உள்ளன.

குறிப்பாக அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம், மாகாணசபைகளுக்கு பல்கலைக்கழகம் ஆரம்பிப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதியின்றி தமக்குத் தேவையான வகையில் மாகாணசபைகள் பல்கலைக்கழகம் ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்குவது பாரதூரமான- பயங்கரமான விடயமாகும்.

புதிய ஏற்பாட்டின் பிரகாரம் கிழக்கு மாகாணம் நினைத்தால், மத்திய கிழக்கின் உதவியுடன் 'ஷரிஆ' கற்பிக்கும் பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்கலாம். அதேபோல கனடாவில் பாடசாலையொன்றில் இனப்படுகொலை தொடர்பான திட்டம் உள்வாங்கப்பட்டதுபோல வடக்கில் பல்கலைக்கழகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு மாணவர்கள் மூளைச்சலவை செய்யப்படலாம். நாட்டுக்கு நன்மை பயக்கும் வகையிலேயே பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டும். மத்திய அரசின் சட்டங்களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.' என்றார். (அ-ம-44)

உதயன் பத்திரிகையில் தொழில்நுட்பத் தவறு காரணமாக 17.11.2023 பத்திரிகையில் விடுபட்ட 11 ஆம் பக்கத்தில் இடம்பெற்ற செய்திகள் இங்கே சுருக்கமாகத் தரப்படுகின்றன.

# சர்ச்சைக்குரிய சடலம்; இனங்காணல் தாமதம்

வவுனியா, நவ. 18

வவுனியா, தரணிக்குளம் பகுதியில் கைகள், கால்கள் துண்டிக்கப்பட்டு உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்ட பெண்ணின் சடலம் இன்னமும் இனங்காணப்படவில்லை. இதனால், உடற்கூற்றுப் பரிசோதனைகள் தாமதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் மீட்கப்பட்ட இந்தச் சடலம் வடமாகாணத்தில் பல்வேறு அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது. அந்தப் பெண் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது. இதனால், சடலத்தின் மீதான உடற்கூற்றுப் பரிசோதனைகள் தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு நிலவுகின்ற நிலையிலேயே, சடலம் அடையாளம் காணப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-110)

# பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்க வாருங்கள்!

## புலம்பெயர் தமிழர்களையும் அழைக்கின்றார் ஜனாதிபதி

கொழும்பு, நவ. 18

தமிழ், சிங்கள புலம்பெயர் இலங்கையர்கள் இந்நாட்டு பிள்ளைகளின் கல்விக்கு ஆதரவளிக்கும் வகையில் புதிய பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்கவேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மொழி அறிவை சிங்களம், தமிழ் மொழிகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்த முடியாது. 2030ஆம் ஆண்டளவில் அனைவருக்கும் ஆங்கிலம் என்ற திட்டம் அனைத்து பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் பல்கலைக்கழகளிலும் அறிமுகப்படுத்தப்படும் - என்றார். (ம)

# புரையேறிய பிட்டால் உயிரிழந்த இளைஞர்!



யாழ்ப்பாணம், நவ. 18

பிட்டுப் புரையேறி இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். பருத்தித்துறை - கற்கோவளத்தைச் சேர்ந்த இராசரத்தினம் சுமணன் (வயது-21) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 14ஆம் திகதி பிட்டு சாப்பிடும்போது அவருக்குப் புரைக்கேறியுள்ளது. பின்னர் மரணச் சடங்கொன்றில் கலந்துவிட்டு வீடு திரும்பியுள்ளார். நெஞ்சு வலி அதிகரித்ததையடுத்து அவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று தெரிவித்துள்ளனர்.

இறப்பு விசாரணைகளை திடீர் மரணவிசாரணை அதிகாரி ச.சிவராஜா மேற்கொண்டார். இதற்கமைய சட்ட மருத்துவ அதிகாரி பி.வாசுதேவா உடற்கூற்றுப் பரிசோதனையை மேற்கொண்டார். (அ-ம-100)

# மாலைதீவுக்கு பறந்தார் ரணில்



கொழும்பு, நவ. 18

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் மாலை, மாலைதீவுக்குச் சென்றுள்ளார். மாலைதீவில் அண்மையில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற மொகமட் மூசுவின் பதவியேற்பு விழாவில் கலந்துகொள்வதற்காகவே அவர் மாலைதீவுக்குச் சென்றுள்ளார். (அ-ம)

## புலமைப்பரிசில் பரீட்சை:

# பெறுபேறுகள் வெளியாகின

கொழும்பு, நவ. 18

2023ஆம் ஆண்டுக்கான 5ஆம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சை பெறுபேறுகள் நேற்றுமுன்தினம் இரவு இணையத்தளத்தில் வெளியாகியுள்ளன.

பெறுபேறுகளை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.doenets.lk ல் பார்வையிட முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# யுவதி மீது பாலியல் சீண்டல்; ஒருவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், நவ. 18

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள குளிரகம் ஒன்றில் பணியாற்றும் யுவதிக்குப் பாலியல் சீண்டல் விடுத்தார் என்ற குற்றச்சாட்டில், அந்தக் குளிரகத்தின் உரிமையாளர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-ம-125)

## முன்னாள் தவிசாளர் ஜெபநேசன் உள்ளிட்ட நால்வருக்கு

# மாவீரர்தின அனுஷ்டிப்பு; நீதிமன்றுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், நவ. 18

மாவீரர்தினம் அனுஷ்டிப்புத் தொடர்பாக வலி. தென்மேற்கு பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் அ.ஜெபநேசன், முன்னாள் சபை உறுப்பினர்களான அனுசன், பகீரதன், நமணன் ஆகியோரை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்றால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. நேற்றைய தினம் காலை ஒன்பது மணியளவில் நீதிமன்றில் முன்னிலையாகி மாவீரர்தின நினைவேந்தல் தொடர்பில் விளக்கமளிப்பதற்காக அவர்கள் அழைக்கப்பட்டனர் என்று தெரியவருகின்றது. (அ-ம-125)

## இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக

# தாயகம் திரும்பியோருக்கு நீதிமன்றத்தால் பிணை!

யாழ்ப்பாணம், நவ. 18

தமிழ்நாட்டில் அகதிகளாக தஞ்சமடைந்து 33 ஆண்டுகள் வாழ்ந்து வந்த நிலையில் சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக தாயகம் திரும்பிய நிலையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட் டிருந்த வடமராட்சி கிழக்கு குடத்தனையை சேர்ந்த மூவரையும் பிணையில் விடுவித்து பருத்தித்துறை நீதவான் கிரிசாந்தன் பொன்னுத்துரை உத்தரவிட்டுள்ளார். (அ-ம-100)

# சிறுமியைத் துன்புறுத்திய கொடூரத் தந்தைக்கு சிறை!

யாழ்ப்பாணம், நவ. 18

நான்கு வயதுச் சிறுமியை கடுமையாகத் தாக்கிச் சித்திரவதை செய்த குற்றச்சாட்டில், கடந்த வருடம் நவம்பரில் கைதுசெய்யப்பட்ட சிறுமியின் தந்தைக்கு இரண்டு வருடங்கள் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பிட்டுள்ளது ஊர்காவற்றுறை நீதிமன்றம்.

35 வயதான அந்த நபரால் சிறுமி மூர்க்கத்தனமாகத் தாக்கப்படும் வீடியோ கடந்த வருடம் நவம்பர் மாதம் முற்பகுதியில் சமூக வலைத்தளங்களில் வைரலானது. அந்தச் சிறுமியின் தாயாருடைய கண்ணீர்அஞ்சலி பதாகையும் சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்டிருந்தது.

இதையடுத்து [illegible] தேடும் நடவடிக்கைகள் மு[illegible]ிருந்தன. இதையடுத்து, சிறுமியின் தந்தை தீவிரமாகத் தேடப்பட்ட நிலையில், அடுத்த சில தினங்களில் யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் வைத்து சிறுமியும் அவர் தாயாரும் மீட்கப்பட்டனர். தாயார் இறந்துவிட்டார் என்று வெளியான தகவல் போலியானது என்றும் தெரியவந்தது.

இதையடுத்து, சிறுமியின் தந்தை தீவிரமாகத் தேடப்பட்ட நிலையில், அடுத்த சில தினங்களில் யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் வைத்து அவர் கைதுசெய்யப்பட்டார். 'மனைவியுடன் ஏற்பட்ட தகராறால் மகளைத் தாக்கினேன்' என்று அவர் வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோதே அவருக்கு இரு வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பொருளாதாரக் குற்றவாளிகள் தப்பலாகாது

இலங்கையின் பொருளாதார நெருக்கடிகள் தோற்றம் பெறுவதற்கு ராஜபக்சக்களின் தவறான தீர்மானங்களே காரணம் என்று உயர் நீதிமன்றம் கடந்த திங்கட்கிழமை தீர்ப்பளித்திருக்கின்றது. முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ச, கோத்தாபய ராஜபக்ச மற்றும் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ச ஆகியோரைப் பெயர் குறிப்பிட்ட நீதிமன்றம், பொருளாதாரக் குற்றவாளிகளாகவும் அடையாளம் காட்டியிருக்கின்றது.

இந்த நாட்டைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கிய ராஜபக்ச சகோதரர்கள் மூவர் உட்பட மேலும் சில அதிகாரிகளும் இதற்குப் பொறுப்பாளிகள் என்று மாத்திரமே உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறதேதவிர அவர்களுக்கு எந்தவொரு தண்டமோ, தண்டனையோ விதிக்கப்படவில்லை. உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் மனுதாரர் கோராத நிவாரணத்தை உயர் நீதிமன்றம் தானாக வழங்குவதில்லை என்ற சம்பிரதாய நடைமுறை காரணமாக அவர்களுக்குத் தண்டனையோ, தண்டமோ விதிக்கப்படாமலிருக்கலாம். ஆனால், இந்த நாட்டின் ஒட்டுமொத்த மக்களையும் இன்று வரையிலும் நெருக்கடிக்குள் தள்ளி அவர்களைத் துன்பத்தில் வைத்திருப்பதற்கு இந்த வங்குரோத்தே காரணம் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. எதிர்காலத்தில் மேற்ள்ளகொள்ளவுள்ள ஒவ்வொரு வரி அதிகரிப்புக்குப் பின்னாலும், கட்டண உயர்வுக்குப் பின்னாலும் இந்தப் பொருளாதார நெருக்கடியே அச்சாணியாக இருக்கப் போகின்றது. அப்படிப்பட்ட பொருளாதார நெருக்கடிக்குக்காரணமான இந்தப் பொருளாதாரக் குற்றவாளிகளை இலகுவில் தண்டனையோ, தண்டமோ எதுவும் இல்லாமல் சுதந்திரப்பறவைகளாக விட்டு வைத்தமை பேராபத்தானது. சாதாரணமாக அரச சொத்துக்கு சிறு ஊறு விளைவித்தாலே பெருந்தண்டனை வழங்கப்படும் நிலையில் ஒட்டுமொத்த நாட்டையும் சீரழித்த குற்றவாளிகளை வெறுமனே அடையாளப்படுத்திவிட்டு, தண்டிக்காமல் விடுதலென்பது அந்தப் பொருளாதாரக் குற்றவாளிகள் இன்னுமின்னும் இதே நாசகார வேலையைத் தொடர ஏதுவாகிவிடும்.

இப்படிப்பட்டவர்களை தங்கள் வாக்குகளால் ஆட்சி அதிகாரத்துக்கு ஏற்றிவைத்த மக்களும் பொருளாதார நெருக்கடிக்குப் பொறுப்பானவர்கள்தான். எந்தவொரு சிந்தனையும் இல்லாது வெறும் பௌத்த – சிங்கள இனவாதத்தை மாத்திரம் நம்பி, அதன் பின்னால் அணிதிரண்டு வாக்களித்த அந்த மக்களும் இந்த நெருக்கடிக்குப் பாத்திரவாளிகள்தான். ஆனால், ராஜபக்சக்களுக்கு வாக்களித்தவர்களோ அல்லது தென்னிலங்கைத் தலைமைகளோ இந்த மோசமான பின்னடைவுகளிலிருந்து பாடம் படித்ததாகத் தெரியவில்லை. மீண்டும் மீண்டும் இனவாத சகதிக்குள் நின்றுகொண்டு அதை வாக்குகளாக அறுவடை செய்யவே விளைகின்றனர். பொருளாதாரக் குற்றவாளிகளாக ராஜபக்சக்களை உயர் நீதிமன்றம் அடையாளப்படுத்தியிருந்தாலும் அவர்கள் மீளவும் தேர்தல்களில் போட்டியிடும்போது கையிலெடுக்கும் இனவாத சகதிக்குள் இந்த வாக்காளர்களும் வீழ்ந்து வாக்களிக்கப்போகின்றார்கள்தான். எனவே அவ்வாறானதொரு நிலைமை தோற்றம் பெறாமல் இருப்பதற்கு, ராஜபக்சக்கள் உட்பட பொருளாதாரக் குற்றவாளிகள் அனைவரினதும் குடியுரிமை பறிக்கப்படவேண்டும். அவர்களது சொத்துகள் முடக்கப்படவேண்டும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் தண்டனையிலிருந்து தப்பிக்கும் கலாசாரம் பன்னெடும் காலமாகத் தொடர்கின்றது. தமிழ் மக்களுக்கு எதிரான குற்றங்களுக்கு அரசாங்க ஆதரவுடன் தண்டனையிலிருந்து விலக்களிக்கும் கலாசாரம் தொடக்கி வைக்கப்பட்டது. அது இப்போதும் தொடர்கின்றது. இதனால் தமிழ் மக்கள் மீளவும் மீளவும் துன்பங்களை எதிர்கொள்வதைப் போல, பொருளாதாரக் குற்றவாளிகளும் தண்டனையிலிருந்து விலக்களிக்கப்பட்டால் இந்த நாடு மீண்டும் மீண்டும் பாதாளத்துக்குள்தான் தள்ளப்படும்.

## வடமாகாண மரநடுகை மாதம்

நவம்பர் 2023

"மரங்களை காற்றைச் சலவை செய்யும் இயந்திரங்களாகவும் குளிர்விக்கும் பதனப்படுத்திகளாகவும் சொல்லித்தரும் அறிவியலும் உயிர்காக்கும் மரங்களைப் பணங்காய்ச்சி மரங்களாகப் போதிக்கும் பொருளியலும் ஆதிக்கம்பெற்றுள்ள நிலையில் மரங்களுக்கும் எமக்கும் இடையிலான பண்பாட்டு உறவை மீட்டுருவாக்கும் செய்வது அவசியம் ஆகும். இந்தப் பண்பாட்டு உறவே மரங்கள் மீதான பற்றுதலை வளர்க்கும்."

பொ.ஐங்கரநேசன்

தலைவர் – தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்






# ராஜபக்சக்களுக்கான தீர்ப்பில் தண்டனையை நிறைவேற்றுக

## சார்ள்ஸ் எம்.பி. தெரிவிப்பு

**கொழும்பு, நவ. 18**

**பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்கள் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளும் வகையிலேயே இந்த வரவு - செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி கூறுகின்றார். பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்கள் தொடர்பில் உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இதுதொடர்பில் நாடாளுமன்றம் என்ன செய்யப்போகின்றது? அவர்களுக்கு எதிராக நாடாளுமன்றம் ஊடாக நடவடிக்கை எடுக்கவேண்டும். தண்டனை வழங்கப்பட வேண்டும் - என்றார். (ச-44)

# மூச்சுவிட வழியமைத்த ராஜபக்சக்கள் துரோகிகளா?

## பெரமுன சீற்றம்

புலிகளுக்கு முடிவுகட்டி நாட்டு மக்களுக்கு மூச்சுத் தந்த ராஜபக்சக்கள் துரோகிகளா? மஹிந்தவின் புண்ணியத்தால்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கூட சுதந்திரமாக நடமாடமுடிகின்றது என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு.

'புலிகளும், ஜே.வி.பி.யினரும்தான் இந்நாட்டைச் சீரழித்தனர். ராஜபக்சக்கள்தான் இந்த நாட்டை மீட்டெடுத்தனர். மஹிந்த ராஜபக்சவுக்கு முன் இருந்த தலைவர்கள் போரை முடிவுக்கு கொண்டுவரவில்லை.

எம்மைக் காப்பாற்றுவதற்கு எவரும் இருக்கவில்லை.

எமக்கு உயிர் தந்தது மஹிந்த ராஜபக்சதான். சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட போதும் நாட்டை மீட்டது ராஜபக்சக்கள்தான்.

கொரோனாவால் மக்கள் செத்து மடியும்போது மக்களைப் பாதுகாத்தது ராஜபக்சக்கள், இப்படியானவர்கள் துரோகிகளா? ராஜபக்சக்கள் இல்லாவிட்டால் நானும் ஈழத்தில்தான் வாழவேண்டி வந்திருக்கும். மஹிந்தவின் புண்ணியத்தால்தான் சுமந்திரன் உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஆனையிறவு, வவுனியா என எல்லாப்பகுதிகளிலும் இன்று சுதந்திரமாக நடமாடுகின்றனர். துப்பாக்கி ஏந்தி இருந்த வடக்கு சிறார்களுக்கு பேனை வழங்கியது மஹிந்ததான்' - என்றார். (ஒ-44)

| நாளை | 19.11.2023 ஞாயிற்றுக்கிழமை கார்த்திகை 03 | சுபநேரம் : 09.09 – 10.39<br>ராகுகாலம் : 04.39 – 06.09<br>கந்தசஷ்டி நிறைவு |
|---|---|---|

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயர்மாற்றம்

சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகத்தில் வசிக்கும் **சின்னராசா ஸ்ரெலா** ஆகிய நான் எனது பெயரை இன்று முதல் **சின்னராசா களிஸ்ரா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **சின்னராசா களிஸ்ரா** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயகக் குடியரசு மக்களுக்கு தெரியப்படுத்துகின்றேன்.

(cs52874) (N.1) **சின்னராசா களிஸ்ரா**

## 2024 ஆம் ஆண்டு வரைவு வரவு செலவுத்திட்டம்
## கரைதுறைப்பற்று பிரதேசசபை
## முல்லைத்தீவு மாவட்டம்

2024 ஆம் ஆண்டு வரைவு வரவு செலவுத்திட்டம் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பிரிவு 169 இன் கீழ் பொதுமக்கள் பார்வைக்காக, 2023.11.20 ஆம் திகதி தொடக்கம் 2023.12.03 ஆம் திகதி வரையிலான அலுவலக நாட்களில் காலை 8.30 மணி முதல் மாலை 4.15 மணிவரை தலைமை அலுவலகம், உப அலுவலகங்கள் (முல்லைத்தீவு, முள்ளியவளை, முள்ளிவாய்க்கால், செம்மலை, கொக்கிளாய்) மற்றும் பொது நூலகங்களில் வைக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் தெரியப்படுத்துகின்றேன்.

**2024ம் ஆண்டு வரைவு வரவுசெலவுத்திட்ட அறிக்கை**

| | | |
|---|---|---|
| **வருமானம்** | | |
| சபையின் சொந்த வருமானம் | 74,671,739.00 | |
| அரசிறை மானியங்கள் நிர்வாக மீளளிப்புக்கள் | 60,273,993.00 | |
| எதிர்பார்க்கப்படும் மொத்த வருமானம் | | **134,945,732.00** |
| **செலவினம்** | | |
| மீண்டெழும் செலவுகள் | 111,293,746.00 | |
| மூலதனச் செலவுகள் | 23,650,000.00 | |
| எதிர்பார்க்கப்படும் மொத்த செலவினம் | | **134,943,746.00** |

**கா. சண்முகதாசன்,**
**செயலாளர்,**
**கரைதுறைப்பற்று பிரதேசசபை.**
**2023.11.18**

(cr. 41035) (N.1)

## MORA EXAMS 2023

Mora E Tamils

மொறட்டுவைப் பல்கலைக்கழக பொறியியற் பீட தமிழ் மாணவர்கள் நடாத்தும் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான முன்னோடி பரீட்சை ஆனது 13 வருட வெற்றியின் பின் 14வது முறையாக நடைபெறவுள்ளது.

கார்த்திகை 25 - மார்கழி 10 வரை பரீட்சைகள் இலங்கை முழுவதும் நடைபெறும்.

தற்போது பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை நிகழ்நிலையில் (Online) நிரப்பிக் கொள்ளலாம்.

**முடிவுத்திகதிக்கு இன்னும் இரு தினங்களே உள்ளன.**

*Online Application form* | *Guidance Video Tamil* | *Guidance Video English*

076 351 4599, 077 020 4139
moraetamils@gmail.com
www.moraetamils.com
/Mora E-Tamils

-பரீட்சைக் குழு-
மொறட்டுவைப் பல்கலைக்கழக
பொறியியற் பீட தமிழ் மாணவர்கள்

ஊடக அனுசரணை:- உதயன் மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

உடுவில் மானிப்பாயைச் சேர்ந்த
**நிரூபன் தர்ஷினி** தம்பதியரின்
செல்வப்புதல்வன்

## நிரூபன் கர்ஷன்

**2023 ஆம் ஆண்டு நடைபெற்ற**




**தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில்**
**178 புள்ளிகளைப்**
பெற்று சித்தியடைந்தமையை பாராட்டுவதுடன் மேலும் பல பரீட்சைகளில் சித்தியடையவும் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அமுதர் ஐயா குடும்பத்தினர்
மானிப்பாய்.

## 28 ஆம் ஆண்டு நீங்கா நினைவுகளுடன்...

மண்மகிழ 08 • 09 • 1972



மனம்நெகிழ 29 • 10 • 1995

## வீரகத்தி ஜெயறூபன்

**திதி: 18.11.2023**


பார் போற்ற வாழ்ந்த நாயகனே !
பண்புள்ளம் கொண்டவனே!
மண்ணில் நாம் மகிழ்வுடன் வாழ்ந்திட
மாமனிதனாய் உழைத்தவனே !
அழகன் முருகனது திருவுருவம் உடையவனே!
அன்பாய் அனைவரையும் கவர்ந்த அழகன் - நீ
கந்த சஷ்டி விரத நன்நாளிலே
கந்தன் பாதம் சேர்ந்தனையோ !

**ஆறாது எம்நெஞ்சம் என்றும் உன் நினைவுகளுடன்**

**சிவன்கோயில் வீதி,**
**எழுதுமட்டுவாழ்.** **குடும்பத்தினர்**

(cs. 26926) (N.1)

## முதலாம் ஆண்டு நினைவுநாள்



**தோற்றம் 01.11.1950** **மறைவு 29.11.2022**

## அமரர்
## அப்பாப்பிள்ளை விஜயநாதன்

(ஓய்வு பெற்ற ஆசிரியர் - யாழ், பெரியபுலம் மகாவித்தியாலயம், முன்னாள் Accounting Book Keeper, வீடமைப்பு அதிகாரசபை மன்னார், யாழ் மாவட்ட செயலகம், முன்னாள் கணக்காளர் பனை தென்னை கூட்டுறவு சபை - சங்கானை)

எங்கள் அன்புத் தெய்வம் அப்பா !
ஆண்டு ஒன்று சென்றாலும்
உங்களுடன் கூடி வாழ்ந்த காலங்கள்
என்றும் பசுமையானவை. உங்கள்
வழிகாட்டல்கள் எங்களை வழிநடத்தும்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (cs.50089) (N - 1) **குடும்பத்தினர்**

## கருகம்பனையில் குருதிக்கொடை

யாழ்ப்பாணம், நவ. 18

கருகம்பனை தமிழ் மன்றம் சனசமூக நிலையம், கருகம்பனை பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் குருதிக் கொடை முகாமை நடத்தவுள்ளது.

கருகம்பனை கலாசார மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 3.30 மணிவரை குருதிக்கொடை முகாம் இடம்பெறும். குருதிக்கொடையாளர்கள் பங்கேற்றுகுருதித்தானம் அளிக்குமாறு ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

(ச)

## பரிசளிப்பு நிகழ்வு

கைதடி பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்புவிழா அன்னை இரத்தினம் மணிமண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் க.சந்திரகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மதியழகன் கலந்துகொள்ளவுள்ளார்.

(ரி-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். இந்து மகளிர் மாணவி மாவட்ட நிலையில் முதலிடம்

யாழ்ப்பாணம், நவ. 18

2023ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பெறுபேற்றில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவி வனிஷ்கா 196 புள்ளிகளைப் பெற்று, யாழ். மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார். (அ-ரி)




## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள கொண்டா பென்லி 125 மொடல் மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
881, ஆஸ்பத்திரி றோட், யாழ்ப்பாணம்.

(cs 26975) (N.1)

**021 222 4436**

## தென்னம்பிள்ளை விற்பனைக்கு

எம்மிடம் நல்லின தென்னம் நாற்றுக்கள் விற்பனைக்குண்டு.

**077 659 2044**

## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

யாழ்நகரிற்கு அண்மையில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு பகல் நேர பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் தேவை. ஊதியமாக ரூ. 40, 000.00 உம் இருவேளை உணவும். வழங்கப்படும்.

**077 278 9032**


## யாழ். பொதுநூலகத்தில் மேலுமிரு தினங்கள் புத்தகக் கண்காட்சி

*யாழ்ப்பாணம், நவ. 18*

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு யாழ்ப்பாணப் பொதுநூலகமும் உள்ளூர் புத்தகசாலைகளும் இணைந்து நடத்தும் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் கடந்த புதன்கிழமை முதல் யாழ். பொது நூலக மண்டபத்தில் இடம்பெற்று வரும் நிலையில், வாசகர் சமூகத்தின் கோரிக்கைக் கமைய மேலும் இரு தினங்கள் இந்தச் செயற்றிட்டம் நீடிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இந்தப் புத்தகக் காட்சிக் கூடம் இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணிமுதல் மாலை 4.30 மணிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

### பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள் மற்றும் சிற்றுண்டிச்சாலை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி மற்றும் மீள்கேள்விகள் அறிவித்தல் - 2024

கீழ்க்குறிப்பிடப்படும் பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள் மற்றும் சிற்றுண்டிச்சாலை என்பவற்றை 2024 ஆம் ஆண்டிற்கு (01.01.2024 - 31.12.2024) குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி மற்றும் மீள்கேள்விகள் சபையினால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 20.11.2023- 04.12.2023 நண்பகல் 12.00 மணி வரை

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி : 04.12.2023 திங்கட்கிழமை பி.ப 02.00 மணி வரை

கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 04.12.2023 திங்கட்கிழமை பி.ப 02.00 மணி

கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம்: வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாகக் குறிப்பிட்டு மூலப்பிரதியை "செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்" என்னும் முகவரிக்கும், இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்" என்னும் முகவரிக்கும் எதிர்வரும் 04.12.2023 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலும் கேள்வியை தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

உரிய கட்டணங்களைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**கேள்வி அறிவித்தல்**

| இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவ கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மாதாந்த வாடகை | கேள்வித் தொகை (VAT,NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| அச்சுவேலி உப அலுவலகம் | | | | | |
| 1 | அச்சுவேலி ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 1,200.00 | 200,000.00 |

**மீள்கேள்விகள் அறிவித்தல்**

| இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவ கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மாதாந்த வாடகை | மீள் கேள்வித் தொகை (VAT,NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| அச்சுவேலி உப அலுவலகம் | | | | | |
| 1 | அச்சுவேலி பொதுச்சந்தை | 1,000.00 | 50,000.00 | | 9,966,792.00 |
| 2 | அக்கரை கடற்கரையின் சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 1,000.00 | 500.00 | 61,380.00 |
| கோப்பாய் உப அலுவலகம் | | | | | |
| 3 | கோப்பாய் கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 2,250.00 | 495,495.00 |
| உரும்பிராய் உப அலுவலகம் | | | | | |
| 4 | உரும்பிராய் ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 2,250.00 | 614,889.00 |

1. சந்தையிலிருந்து 1/2 கி.மீற்றர் சுற்றாடலில் மீன், இறைச்சி, மரக்கறி விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.
2. கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையுடன் சமூகமளிக்கும் போது அதன் நிழற்படப்பிரதியையும் பிரதேச கிராம சேவையாளரினால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் அல்லது வதிவிடத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஏதாவதொரு பிரதி (மின்சார கட்டணப்பட்டியல், வங்கிக்கணக்கு புத்தகப்பிரதி) சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
3. கேள்விப்படிவக்கட்டணம் கேள்வித்தொகை மாத வாடகை என்பவற்றுக்கு காலத்துக்குக்காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரி செலுத்தப்படவேண்டும். அத்துடன் விலை மதிப்பீட்டுத் திணைக் களத்தினால் மாதாந்த வாடகை மீள்மதிப்பீடு செய்யப்படும் போது மதிப்பீடு செய்யப்படும் தொகை செலுத்தப்படல் வேண்டும்.
4. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
5. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
6. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அவரது ஒரு பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
7. சந்தையை குத்தகைக்கு எடுப்பவர்களால் உற்பத்தியாளர்களினால் கொண்டு வரப்படும் உற்பத்திப்பொருட்களுக்கு 4% வரி அறவிடப்படல் வேண்டும். பொதுச்சந்தையில் கழிவு நடைமுறை, தரகுக்கட்டண அறவீடு என்பன முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.
8. கேள்வி கோரும் ஒவ்வொரு கேள்விப் பத்திரங்களுக்கும் தனித்தனியாக மீளளிக்கப்படாத படிவக் கட்டணமும், மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமும் செலுத்தப்படவேண்டும்.
9. உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை இல 03/2015 இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளை பின்பற்றி ஒப்பந்தம் செய்யப்படல் வேண்டும். இது தொடர்பான விபரங்களை கேள்விப்பத்திரங்களை பெறும் போது தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
10. சபையின் அச்சுவேலி கொல்களத்தில் / பிரதேச சபையினால் அனுமதிக்கப்படும் கொல்களத்தில் ஆடு, மாடு இறைச்சிக்கடைகளின் குத்தகைதாரர்கள் பாவனைக்குட்படுத்த அனுமதி வழங்கப்படும். மேலும் கொல்களப் பாவனை தொடர்பில் சபையினது அறிவுறுத்தல்களிற்கு குத்தகைதாரர்கள் கட்டுப்படுதல் வேண்டும். கேள்விகள் சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

இராமலிங்கம் பகீரதன்
செயலாளர்,
வலிகாமம் கிழக்த பிரதேச சபை
புத்தூர்.
2023.11.18

(CR 41080A-1)


## நல்லூர்க் கந்தன் திருமணசேவை

எம்மிடம் எல்லா இன மத மணமகன்கள், மணமகள்கள் அரச உத்தியோகம், உத்தியோகம் இல்லாதது, இஞ்சினியர், டாக்ரர் பொறியியலாளர் செவ்வாய் குற்றம் உள்ளவர்கள், செவ்வாய் இல்லாதவர்கள், விவாகரத்தானவர்கள், சூரியன், செவ்வாய் உள்ளவர்கள், இல்லாதாவர்கள் எல்லோருக்கும் எம்மிடம் மண மக்கள் உண்டு .

**குறிப்பு:**

1979 ஆம் ஆண்டு விவாகரத்துபெற்ற ஆண் (V) மணமகனுக்கு விவாகரத்துபெற்ற மணமகள் தேவை.

**தொடர்புகொள்க: வி.ஜெயந்தி**

(cs.52872) (N.1) **077 973 3183**


## ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

### விண்ணப்பம் கோரல்

எமது சங்கத்தினால் பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

I) 1) பொதுமுகாமையாளர் - குறி: இல-101/08
சம்பளத்திட்டம் - 20665-260 x10-280 x 10-26065 (02/2022 சுற்று நிருபப்படி)
**வெற்றிடம் - 01**

**தகைமைகள்:-**

அ) கூட்டுறவு ஊழியர் 9வது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை / மேற்பார்வை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் - அல்லது

கூட்டுறவு ஊழியர் 10வது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை / மேற்பார்வை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம் - அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப்பட்டம் / அதற்குச் சமமான தகைமை. இத் தகைமையானது கணக்கியல் / வியாபாரப் புள்ளி விபரவியல் / வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். - அல்லது

இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்கியல் / முகாமைத்துவம் / வர்த்தகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி. - அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம் - அல்லது

க.பொ.த. உயர் தரப் பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம்

II) கிராமிய வங்கி முகாமையாளர்- குறி.இல -205/13
சம்பளத்திட்டம் - 18360-160 x10-170 x 10-21660 (02/2022 சுற்று நிருபப்படி)

**வெற்றிடம் - 01**

**தகைமைகள்:-**

அ) கூட்டுறவு ஊழியர் 14வது சம்பளத்திட்டப் பதவியில் கிராமிய வங்கிப் பிரிவு பதவியொன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் - அல்லது

கூட்டுறவு ஊழியர் 15வது சம்பளத்திட்டத்தில் கிராமிய வங்கிப் பிரிவு பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம் - அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி / க.பொ.த உயர்தரப் பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தி.

02) வயதெல்லை :18 – 45 வரை

03) விண்ணப்ப முடிவுத் திகதி : 05.12.2023

**குறிப்பு:**

1 சங்க எல்லைப் பரப்பில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.
3. வேறு சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்கவேண்டும்.
4. சங்கத்தால் கோரப்படும் பிணையைச் செலுத்த வேண்டும்.
5. சுற்று நிருபங்களுக்கு அமைய மேலதிகக் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
6. விண்ணப்பங்கள் யாவும் சுயமாக தயாரித்து நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பவேண்டும்.
7 விண்ணப்ப கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவி குறிப்பிடப்படல் வேண்டும்.
8. விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி: **தலைவர், ஊர்காவற்றுறை. ப.நோ.கூ.சங்கம், ஊர்காவற்றுறை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE HALO TRUST
450 Thirunagar West, Kilinochchi, Sri Lanka
T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

# Vacancy Advertisement for QA and Training Coordinator

The HALO Trust is the world's largest and oldest international humanitarian mine action non-government organization (NGO). For over thirty years, we have been saving lives and helping war-torn communities recover, by making their land safe. Our mission is to protect lives and restore the livelihoods of those affected by conflict.

HALO has been working in Sri Lanka since 2002 and now has over 1,200 staff working in the Northern Province with offices in Jaffna, Kilinochchi and Mullaitivu. To date, HALO has safely destroyed over one million items of explosive ordnance, including more than 270,000 anti-personnel landmines. HALO and other mine action stakeholders are working to clear Sri Lanka of all known contamination by 2028 to meet Sri Lanka's obligations as a state party to the Anti-Personnel Mine Ban Convention. We are looking to recruit QA and Training Coordinator. **Provide support to ensure the QA and training Process is delivered on time and to a high standard.**

**The QA and Training Coordinator's Responsibilities are.**


- Work with the Operations Manager to set overall objectives for HALO Sri Lanka's Quality Assurance and Training activity.
- Coordinate monthly and annual Quality Assurance and Training deployment and workplans.
- Perform quality checks on all Quality Assurance and Training activities (QA reports, training management plans and exam modalities) to ensure activities are safe, professional, and held according to HALO Sri Lanka's Standards of Operations.
- Monitor Quality Assurance and Training delivery in the training ground/ field and provide operational advice to Quality Assurance and Training teams upon request.
- Run monthly QA and Training team meeting.
- Analysis QA findings and SOP breach trends to identify additional training requirements.
- Propose SOP improvements to raise the safety, efficiency and discipline of HALO's operations.
- Train, mentor and develop Quality Assurance and Training Teams to continually improve the quality of output.
- Monitor the welfare of Quality Assurance and Training staff, manage annual leave and sick leave requests.
- Conduct site QA visits of minefields across all of HALO Sri Lanka areas of operation.
- Assist with any accident or incident investigation, and ensure lessons learnt and recommendations are disseminated and followed amongst Quality Assurance and Training Teams personnel.
- Perform any other duties requested by the Operations Officers or Operations Manager.

All applications must be submitted to the below address no later than **Saturday 25 November 2023 either by Post or via email below. "If there is a sufficient caliber of applicants, we reserve the right to close the role earlier than the date noted."** Only successful applications will be contacted. For further information, please contact 021 228 5466. HALO encourages applicants from all backgrounds to apply for this role. We especially welcome applications from female candidates.

**HR Manager**
The HALO Trust,
450 Thirunagar West, Kilinochchi
hr@halosrilanka.org

---

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 07 . 04 . 1950 — மறைவு 09 . 12 . 2021

## அமரர் வல்லிபுரம் நாகேஸ்வரன் (சிறி)

(ஓய்வு பெற்ற தொழில்நுட்ப அலுவலர், வீதி அபிவிருத்தி அதிகார சபை)

திதி: 18.11.2023

அன்போடு எங்களை எல்லாம் அரவணைத்து
பாசத்தின் உயிராய் எம்முடன் வாழ்ந்து
எல்லோரையும் அழவிட்டு மறைந்த
எம் தெய்வமே! அப்பாவே!

ஒவ்வொரு விடிப்பொழுதும் நீங்கள்
எங்கே என்று எமது விழிகள் தேடுகிறது
உங்கள் நினைவுகளுடன் நாமெல்லாம்
ஒன்று சேர மனம் துடிக்குது மீண்டும்
ஒருமுறை எம்மை கட்டி அரவணைக்க
நீர் எழுந்து வாராயோ அப்பா!

கனவுகள் பல கண்டோம் எம்
அருகில் நீண்டகாலம் இருப்பீர்கள் என்று
நாம் கண்ட கனவுகள் நனவாகும் முன்பே
எம்மை விட்டு ஏன் சென்றீர்கள் அப்பா!

இப்பொழுதும் உம் பாசத்திற்காக
ஏங்கி நாட்கள் எல்லாம் கண்ணீரில்
கரைந்தோட கலங்கித் தவிக்கின்றோம் அப்பா!

என்றென்றும் உங்கள் நினைவலைகள்
அழியாது எம்முடன் வாழும்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!


"சிறி நிவாஸ்"
நுணாவில் கல்வயல் வீதி,
நுணாவில் மத்தி, சாவகச்சேரி.

நினைவுகளுடன்,
குடும்பத்தினர்.

CR (41046) S_1

---

# மரண அறிவித்தல்



தோற்றம் 27.10.1956 — மறைவு 16.11.2023

## தவபுத்திரன் தவராஜா

(ஓய்வுபெற்ற அதிபர்
யா/சண்டிலிப்பாய் வடக்கு தமிழ் கலவன் பாடசாலை)

சண்டிலிப்பாய் வடக்கு சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும். வசிப்பிட மாகவும் கொண்ட தவபுத்திரன் தவராஜா அவர்கள் கடந்த (16.11.2023) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தவபுத்திரன் ஞானமணி தம்பதிகளின் ஏகபுத்திரனும். காலஞ்சென்றவர்களான அருளானந்தம் பாக்கியம் தம்பதிகளின் மருமகனும். தனலட்சுமியின் (ஓய்வுநிலைப் பிரதி அதிபர். யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி) அன்புக் கணவரும் திரியம்பஹாவின் பாசமிகு தந்தையும். யமுனாவின் அன்புச் சகோதரரும். இராஜேந்திரபோஸின் அன்பு மைத்துனரும். டிவன். டிலக்சன். சாமினி ஆகியோரின் அன்பு மாமனாரும். காலஞ்சென்ற வர்களான நாகேந்திரம் அன்னரத்தினம் ஆகியோரின் பெறா மகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.11.2023) ஞயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று. பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொட்டுப்பனை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்பாள் அகம்,
மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.

தகவல் :
குடும்பத்தினர்
077 149 8798

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரடி சாயிபாபாவுக்கும் எங்களுக்கும் என்ன சம்பந்தம்?

## யாழ். மாவட்டச் செயலர் கேள்வி

*யாழ்ப்பாணம், நவ. 18*

**வட இந்தியாவில் ஒரு இஸ்லாமியனாகப் பிறந்து சித்து விளையாட்டுக் காட்டிய சீரடி சாயிபாபாவுக்கு எமது மண்ணில் தேரிழுக்கின்றோம். தங்கத்தில் சிலை வைக்கின்றோம். கோயில் கட்டுகின்றோம். எங்களுடைய பண்பாட்டுக்கும் அவருக்கும் என்ன சம்பந்தம்? என யாழ். மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் பகிரங்கமாகக் கேள்வியெழுப்பியுள்ளார்.**

வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் உடுவில் பிரதேச செயலகமும் கலாசாரப்பேரவையும் இணைந்து நடத்திய பண்பாட்டுப் பெருவிழா2023 நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

யாழ்ப்பாணக் குடாநாடு கந்தபுராண கலாசாரத்துக்குரிய பிரதேசம். நாங்கள் ஆலயங்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு எங்கள் கலாசாரத்தையும், பண்பாட்டையும் வளர்த்துக்கொண்டு வருகிறோம்.

ஆனால், எங்கள் பண்பாட்டையும், கலாசாரத்தையும், சமயத்தையும், தத்துவங்களையும் வளர்த்த பெரியவர்களின் சமாதிகளும், ஆலயங்களும் உறங்கிக் கொண்டிருக்கின்றன. அங்கு யாரும் செல்வதில்லை. அவர்களைத் துதிப்பதில்லை. அவர்களின் புகழ் பாடுவதில்லை. அவர்கள் சொன்ன வழியில் நடப்பதுமில்லை.

ஆனால், எங்கேயோ இருந்த சீரடி சாயி பாபா தற்போது இலங்கை முழுவதும் பிரபலமாகிவிட்டார்.

எதுவாகவிருந்தாலும் இறக்குமதியான பொருளாகவிருந்தால் அதற்கு எம்மதியில் ஒரு மரியாதையிருக்கிறது. உலகம் போற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யோகர் சுவாமிகளுக்கு உலகம் முழுவதும் சீடர்களிருக்கிறார்கள்.

அவருடைய தத்துவத்தைப் பின்பற்றுபவர்களிருக்கிறார்கள். ஆனால், மிகப் பெரிய அற்புதங்களைப் புரிந்த யோகர் சுவாமிகளின் சரித்திரம் பற்றியும், அவரது சமாதி எங்கே இருக்கிறது? என்பதும் எம்மில் எத்தனை பேருக்கு முழுமையாகத் தெரியும்?

நம்பிக்கைகள் என்பது வேறு விடயம். ஆனால், யாரோ என்னவோ சொல்கிறார் என்பதற்காக அதனைக் கேட்டு கேட்டு இல்லாத ஒன்றுக்கும் உயிர் கொடுக்கின்ற நிலைமைக்கும் நாங்கள் வந்திருக்கின்றோம்.

இதன்மூலம் எங்களுடைய பண்பாடுகளை நாங்களே குழிதோண்டிப் புதைக்கின்றோம் - என்றார். (ஒ-66)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.

**இடபம்:** சந்திராஷ்டமம் நீடிப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் கவனமுடன் பழகுங்கள். இடம், பொருள் ஏவல் அறிந்து செயற்படவேண்டிய நாள்.

**மிதுனம்:** கடினமான காரியத்தையும் எளிதாக முடிப்பீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். நண்பர்களால் ஆதாயம் பெருகும். வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள்.

**கடகம்:** எதிர்பாராத பணவரவு உண்டு. பழைய உறவினர், நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். பிரபலங்களால் ஆதாயமடைவீர்கள்.

**சிம்மம்:** குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். அக்கம் பக்கம் வீட்டாரின் அன்புத்தொல்லை குறையும். வியாபாரத்தில் புதுத் தொடர்பு கிடைக்கும்.

**கன்னி:** தடைகளைக் கண்டு தளரமாட்டீர்கள். குடும்பத்தில் உள்ள பிரச்சினைகள் நீங்கும். அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்துபோகும்.

**துலாம்:** உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உங்களுக்கு ஒத்தாசையாக இருப்பார்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்புக் கிடைக்கும்.

**விருச்சிகம்:** இதுவரை இருந்த அலைச்சல்கள், யோசனை, கோபம் யாவும் நீங்கி ஒரு தெளிவு பிறக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். தோற்றப் பொலிவு கூடும்.

**தனுசு:** இராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில வேலைகளை நீங்களே முன்னின்று முடிப்பது நல்லது. அக்கம் பக்கத்தில் இருப்பவர்களுடன் இணக்கமாக நடந்துகொள்ளவும்.

**மகரம்:** திட்டமிட்ட காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். யாரிடமும் உணர்ச்சிவசப்பட்டு பேசாதீர்கள். வழக்கில் அலட்சியம் வேண்டாம். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம்.

**கும்பம்:** எதிலும் வெற்றி பெறுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை பெறுவீர்கள்.

**மீனம்:** கோபத்தைக் கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். சிலர் உங்களை நம்பி பெரிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள்.

# மானிப்பாய் மருத்துவமனை கதிரியக்கப் பிரிவு திறப்பு இன்று

யாழ்ப்பாணம், நவ. 18

யாழ்ப்பாணம் மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த மருத்துவமனையில் கதிரியக்கப் பிரிவு இன்று சனிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

தென்னிந்தியத் திருச்சபை யாழ்.ஆதீனத்தின் பேராயர் கலாநிதி வே. பத்மதயாளன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ச-125)




**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

2023 ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 181 புள்ளிகளைப் பெற்று சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலைக்கும் கற்பித்த ஆசிரியர்களுக்கும் பெருமை சேர்த்தவரும் திரு-திருமதி பாஸ்கரன் சிவறாஜினி அவர்களது மகனுமாகிய

செல்வன் **பாஸ்கரன் அம்ஷிக்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல பட்டங்கள் பெற்று பல்லாண்டுகாலம் பேரும் புகழுடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
தாத்தா பொ.சிவலிங்கம்
அம்மம்மா சி.தங்கமணி, மாமா
சிவறாஜன், அத்தை விஜித்தா,
மச்சான்மார், சாம்சரன், அபிசரன்.

**இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்**

**பிரிவு-49**

Diploma in English / Spoken English
★ Diploma in ICT / AI
★ Diploma in Psychology & Counselling
★ Diploma in Nursing
★ Diploma in Care giver
★ Diploma in Film Technology (MS Multi Screen Studio)
★ Diploma in Business Management

ஆரம்பம் 19.11.2023

**காலம்: 03 மாதங்கள்**
**பெறுமதிமிக்க சான்றிதழ் பிரிவுகள்**

குறிப்பு:- Diploma in Film Technology: தென்னிந்திய கலைஞர்களின் ஒழுங்கமைப்பில் பரத், கல்வி அஜய், ஜோன் அன்ரன் கலந்துகொள்ளும் **Workshop** விரைவில் ஆரம்பமாகின்றன.

**IPS** இன் பரிசுக்குவியலின் அடிப்படையில் 19.11.2023 நடைபெறவுள்ள World cup - 2023 Champion எந்த நாட்டு அணி என்பதனை Whatsapp செய்து பரிசினை வெல்லுங்கள்

**IPS** Thirunelvely, Jaffna
*to your future*
TP/Whatsapp:
T.P: 074 234 9120

**வேலையாட்கள் தேவை**

பரந்தனில் உள்ள பண்ணைக்கு வேலையாள் தேவை. மிருகங்கள் மற்றும் வயல்கள் பராமரிப்பு வேலை. திறமையான பணியாளர்கள் வரவேற்கின்றோம். தங்குமிட வசதிகள் உண்டு.
சம்பளம் :- 50,000 - 60,000
மேலதிக சலுகைகள் உண்டு.
தொடர்புகளுக்கு:- 076 324 9977

**FIRST TIME IN JAFFNA**
**யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக**




புகைப்படம், வீடியோ, சினிமா பிரிண்டிங், விளம்பரம் மற்றும் கல்வி மாபெரும் சர்வதேச கண்காட்சி

ஒரே கூரையின் கீழ் 30 இற்கும் மேற்பட்ட சர்வதேச தரத்திலான பிராண்டுகள்

திகதிகளை நினைவில் வைத்திருங்கள் இன்னும் ஏழு நாட்களே உள்ளன...

கார்த்திகை 24 25 26

வீரசிங்கம் மண்டபம் - யாழ்ப்பாணம்

காலை 9.00 தொடக்கம் மாலை 7.00 வரை


EVENT SPONSORED BY DP — PRINCIPAL SPONSORS PRINTING TECHNOLOGIES, CREATEMARK — PLATINUM SPONSORS PHOTOTECHNICA — OFFICIAL COLOUR LAB PARTNER AUSTRIYA — CO SPONSORS Debug — SUPPORTING ORGANIZATIONS — ARISSONA

INFORMATION AND STALL RESERVATION CALL - TYRONE 077 227 95 94

Tima International (Pvt) Ltd.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு 17.09.1950 — இறப்பு 17.11.2023

## கணேசு முருகையா

(ஓய்வு நிலைக் கிராம அலுவலர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர், நல்லூர் பிரதேச சபை.)

மஞ்சத்தடி இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கைப் வசிப்பிடமாகவும் கொண்ட கணேசு முருகையா அவர்கள் நேற்று (17.11.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணேசு-தங்கச்சியம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவஞானம்-நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், அருந்தவமலரின் அன்புக்கணவரும், கேதனன் (விரிவுரையாளர், ATI யாழ்ப்பாணம்), சுவேதனன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், கமநல சேவைகள் நிலையம் புதுக்குடியிருப்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், தயாளினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், மாவட்ட சித்த வைத்தியசாலை), வாணி (அபிவிருத்தி உத்தியோகத்தர், துணுக்காய் பிரதேச சபை) ஆகியோரின் அன்பு மாமனாரும், சக்தியின் அன்புப்பேரனும், திருமதி இராஜேஸ்வரி கருணாமூர்த்தி (Doctor, யாழ். போதனா வைத்தியசாலை), மற்றும் எழிற்செல்வி ஜெயந்தனின் அன்புச்சகோதரரும், சண்முகலிங்கம், காலஞ்சென்ற விநாயகமூர்த்தி, அழகேசன், சிவநேசன் மற்றும் கருணாமூர்த்தி, ஜெயந்தனின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.11.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்பு:**
**021 205 4425**
**077 100 0758**
**077 104 1899**

தகவல்
**குடும்பத்தினர்.**

CS (28993) S-1

# ஓட்டோவில் மின்கலம் திருட்டு ஒருவர் கைதானார்

யாழ்ப்பாணம், நவ. 18

நல்லூர் ஆலய வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோவில், மின்கலத்தைத் திருடியவர் யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

கந்தசஷ்டி விரத தினத்தை முன்னிட்டு நல்லூர் கந்தசாமி ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறும் நிலையில், ஆலயத்துக்கு வந்த பக்தர் ஒருவரின் ஓட்டோவில் இருந்தே மேற்படி மின்கலம் திருடப் பட்டுள்ளது. இதையடுத்து சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டதுடன், மின்கலமும் மீட்கப்பட்டுள்ளது. (அ-ம-27)

## முதலாம் ஆண்டு திவச ஆத்ம சாந்தி அழைப்பு



தோற்றம் 22.03.1943 — மறைவு 13.12.2022

கடந்த 13.12.2022 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர்

### திருமதி ஆறுமுகநாதன் புவனேஸ்வரி

(இளைப்பாறிய அதிபர் - யா/கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம்)

அவர்களின் முதலாம் ஆண்டு திவச ஆத்ம சாந்தி நிகழ்வுகள் இன்று (18.11.2023) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற விருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து இந் நிகழ்வில் கலந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மானிப்பாய் வீதி,
கைதடி தெற்கு.

குடும்பத்தினர்.

(CE 40956) A-1

# இளைஞர் சடலமாக மீட்பு!

இளைஞர் ஒருவர் தூக்கிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம், குப்பிளான் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தூக்கில் அவர் சடலமாக இருப்பதைப் பார்த்தவர்கள் அது தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்கு அறிவித்து சடலத்தை மீட்டுள்ளனர். அவர் தவறான முடிவு எடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் தமது முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவித்தனர். (அ-ம-66)

# மரண அறிவித்தல்



பிறப்பு 27.03.1939 — இறப்பு 17.11.2023

## சின்னத்தம்பி முருகையா

(முன்னாள் சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்)

அங்குடுவனை கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும், கீரிமலையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி முருகையா (முன்னாள் சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்) நேற்று (17.11.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், மாதர் சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், பூரணத்தின் அன்பு கணவரும், மோகனதாஸ் (சிறி), சுபாசினி, ராஜேஸ்வரன் (Dialog), றமேஸ்வரன், நிதர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், உமாதேவி, செல்வச்சந்திரன், மீனயோகினி (கால்நடை வைத்தியர்-உடுவில்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், டிலக்ஷனா, ஸ்ரீராம், தேனுஷன், தேனிலா தேனுஷா, கானுஷன், கார்த்திகன் ஆகியோரின் அன்புப் பேரனும், வள்ளியம்மை, காலஞ்சென்ற நாகரத்தினம் மற்றும் நாகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (குட்டி), நாகலிங்கம், தர்மலிங்கம், சின்னத்தம்பி, மாணிக்கம், சின்னமணி, பார்வதி, தம்பையா, சின்னம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.11.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தககனத்திற்காக கீரிமலை செம்மண் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**077 577 8463, 077 669 9625**

தகவல்
**குடும்பத்தினர்.**

(CS 29983) S-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 28.01.1954 — மறைவு 16.11.2023

## ஜெகதீசன் லட்சுமி

(ஓய்வு பெற்ற லிகிதர்-பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்-காரைநகர்)

பத்தர்கேணி காரைநகரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஜெகதீசன் லட்சுமி அவர்கள் கடந்த (16.11.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை தையல்முத்து தம்பதிகளின் அன்புமகளும், காலஞ்சென்ற ஜெகதீசனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மகேஸ்வரி, காலஞ்சென்ற நவரட்ணம் மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரியும், காலஞ்சென்ற குலராசா மற்றும் விமலாதேவி, சுந்தரமூர்த்தி ஆகியோரின் மைத்துனியும், சற்குணதேவி, சற்குணராசா, நற்குணராசா (சின்னப்பு), அருள்ராசா, அருள்ராணி மற்றும் சத்தியரூபன் ஆகியோரின் சித்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.11.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (பத்தர்கேணி, காரைநகர்) இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கன்று இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பத்தர்கேணி,**
**காரைநகர்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**
**0772336351**
**0776016281**

(CS 23177) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவேந்தலுக்கு தடைவிதிக்க மட்டக்களப்பு மன்றும் மறுத்தது!

மட்டக்களப்பு, நவ. 18
மட்டக்களப்பில், மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளுக்குத் தடை விதிக்கவும், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்த நினைவேந்தல்களில் கலந்துகொள்வதைத் தடைசெய்யவும் மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு நீதிமன்றம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

பொலிஸாரின் மனுவுக்கு எதிராக ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் நீதிமன்றத்தில் முன்னிலையானார். 'உயிரிழந்த ஒருவருக்காக நினைவேந்தும் உரிமை ஒவ்வொரு பிரஜைக்கும் உண்டு. அது அடிப்படை உரிமையும் கூட. அதை மறுக்கும் நடவடிக்கைக்கு நீதிமன்றம் துணைபோகக்கூடாது. மாறாக, அந்த உரிமை நிலை நாட்டப்படுவதை நீதிமன்றம் உறுதி செய்ய வேண்டும்' என்ற சாரப்பட தனது நீண்ட சமர்ப்பணத்தை சுமந்திரன் முன்வைத்தார். பெருமளவான தமிழ்ச் சட்டத்தரணிகள் சுமந்திரனுக்கு அனுசரணையாக தாங்களும் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர். சமர்ப்பணங்களை பரிசீலித்த நீதிமன்றம் பொலிஸாரின் கோரிக்கைப்படி தடைவிதிக்க மறுப்புத் தெரிவித்தது.

மட்டக்களப்பு பொலிஸாரின் விண்ணப்பம் முதலில் நிராகரிக்கப்பட்ட நிலையில், அதையடுத்து கொக்கட்டிச்சோலை பொலிஸாரின் விண்ணப்பம் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. முன்னைய வழக்கின் காரணங்களின் அடிப்படையில் அடுத்த விண்ணப்பமும் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது.

(அ-ம)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது!

எழுதுமட்டுவாழ் பகுதியில் 10 கிலோ 804 கிலோகிராம் கஞ்சாவுடன் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தேசிய போதை தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்று வெள்ளிக்கிழமை காலையில் எழுதுமட்டுவாழில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே மேற்படி நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய மூன்று நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(அ-ம-100)

## பாம்பு...

தனது மனைவியுடன், கடந்த 31ஆம் திகதியன்று தோட்டத்தில் களை பிடுங்கிக்கொண்டிருந்த அவரை இரத்தப்புடையன் வகையைச் சேர்ந்த பாம்பு தீண்டியுள்ளது. இதையடுத்து அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். மயக்கமடைந்த நிலையில் இருந்த அவருக்குத் தீவிர சிகிச்சைகள் வழங்கப்பட்டன. எனினும் அவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ-ம-26)

## இன்று...

பூசை பி.ப. 3.45 மணிக்கும், வசந்த மண்டபப் பூசை மாலை 4 மணிக்கும் இடம்பெறவுள்ளதுடன் அதனைத் தொடர்ந்து சூரசம்ஹாரம் இடம்பெறும். நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை திருக்கல்யாண உற்சவம் நடைபெறும்.

இதேவேளை- வரலாற்றுச் சிறப்பு மிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் இன்று சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு சூரசம்ஹார உற்சவம் இடம்பெறவுள்ளது. வரலாற்றுச் சிறப்பு மிக்க தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய சூரசம்ஹார உற்சவம் இன்று மாலை 4.30 மணிக்கு நடைபெறும். (அ-ஒ-66)

## குடியுரிமையைப்...

கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. இதன்போதே எதிர்க்கட்சித் தலைவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார். இது தொடர்பில் அவர் கூறியவை வருமாறு:

மஹிந்த ராஜபக்ச, கோத்தாபய ராஜபக்ச, பஸில் ராஜபக்ச, பி.பீ.ஜயசுந்தர, அஜித் நிவாட் கப்ரால், ஆடிகல, டபிள்யூ. டி.லக்ஷ்மன் உள்ளிட்டவர்களே பொருளாதாரத்தை வங்குரோத்தடைய வைத்துள்ளனர். உயர்நீதிமன்ற தீர்ப்பின் ஊடாகவும் இது உறுதியாகியுள்ளது. உயர்நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள நபர்களுக்கு இதற்கு மேலும் சிவில் உரிமைகளை வழங்குவது பொருத்தமல்ல என்று மக்கள் கருதுகின்றனர்.

இதற்கமைய மேற்கூறப்பட்ட நபர்களின் குடியுரிமையை பறிப்பதற்கான நடவடிக்கையை விசேட ஜனாதிபதிக் குழு ஊடாகவே முன்னெடுக்கப்படவேண்டும். இதனை ஜனாதிபதியால் மட்டுமே செய்ய முடியும். அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றேன். 220 இலட்சம் மக்களின் சார்பில் இந்த கோரிக்கையை நாம் முன்வைக்கின்றோம். அத்துடன், பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிரிழந்தவர்களுக்கு இழப்பீட்டைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கையையும் ஐக்கிய மக்கள் சக்தி முன்னெடுக்கவுள்ளது' - என்றார். (அ-ம-44)

## ஜோன்...

மாணவர்களின் வீதம் 70.08 என்றவாறாகப் பதிவாகியுள்ளது. இரு மாணவர்கள் 187 புள்ளிகளை பாடசாலைமட்ட உயர் புள்ளிகளாகப் பெற்றுள்ளனர். 233 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேலாகப் பெற்றுள்ளனர். சித்தி வீதம் 99.60 என்றவாறாக உள்ளது. (அ-ம)

## பாதிடு...

பந்துல குணவர்த்தன. நாடாளுமன்றத்தில் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதாரப் பாதிப்புக்கு ராஜபக்சக்கள் உட்பட ஒருசில அரச அதிகாரிகள் பொறுப்புக்கூற வேண்டும் என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது. அரச வருமானம் மற்றும் அரச செலவுகளுக்கான இடைவெளி அதிகமாகக் காணப்படுவதால் சட்டத்தின் ஊடாக ஒரு தீர்மானத்தை எடுக்கவேண்டும் என குறிப்பிடப்பட்டது. இதற்கமைய 2003 ஆம் ஆண்டு நிதி முகாமைத்துவ பொறுப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது. நிதி முகாமைத்துவ பொறுப்புச் சட்டத்துக்கு அமைய வரவு - செலவுத் திட்டத்தின் பற்றாக்குறை 5 சதவீதத்துக்குக் குறைவானதாகக் காணப்படவேண்டும்.

கடன் பெறும் எல்லையை 60 சதவீதமாக நிலைப்படுத்தவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டது. ஆனால், 2003ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆட்சியில் இருந்த சகல அரசாங்கங்களும் நிதி முகாமைத்துவ பொறுப்புச் சட்டத்துக்கு அமைய செயற்படவில்லை.

பொருளாதார நெருக்கடிக்கு, முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய உட்பட அவரது அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று குறிப்பிடப்படுவது முறையற்றது. இலங்கையின் நிலைபேறற்ற கடன் நிலைக்குத் தீர்வு காண்பதற்கு பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்டது. இலங்கையின் கடன் நிலை தொடர்பில் நிதி மற்றும் நீதிக் கட்டமைப்பு ரீதியில் ஆலோசனை பெற்றுக்கொள்வதற்கு சர்வதேச நிறுவனங்களின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்பட்டன. சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள அப்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தீர்மானித்தபோது அதற்கு அமைச்சரவை உறுப்பினர்களான உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார மற்றும் விமல் வீரவன்ஸ ஆகியோர் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். நாணய நிதியத்துக்கு சென்றால் அமைச்சுப் பதவியில் இருந்து விலகுவதாகக் குறிப்பிட்டார்கள். இவ்வாறான பின்னணியில் தான் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்தது.

பொருளாதார மீட்சிக்காக அப்போதைய ஜனாதிபதி கோத்தாபய முன்னெடுத்த தீர்மானங்களையே தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துச் செல்கிறார். ஆனால், உயர் நீதிமன்றம் அந்தத் தீர்மானங்களைத் தவறென்று குறிப்பிடுகிறது.

பொருளாதாரப் பாதிப்பினால் வெளிநாட்டுக் கடன்களைச் செலுத்த முடியாத நிலை உள்ளது. வங்குரோத்து நிலை அறிவித்த தினத்திலிருந்து இன்று வரையான காலப்பகுதியில் மாத்திரம் 36 பில்லியன் டொலர் கடன் செலுத்தல் நிலுவையில் உள்ளது. இந்தக் கடனை எவ்வளவு காலத்துக்கு செலுத்தாமல் இருக்க முடியும். சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புடன் வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. கடன் மறுசீரமைப்பு பணிகள் இன்றும் நிறைவு பெறவில்லை. எதிர்க்கட்சிகளின் நிலைப்பாட்டுக்கு அமைய கடன் மறுசீரமைப்பு தோல்வியடைந்தால் பெரும் நெருக்கடிகளை அடுத்த ஆண்டும் எதிர்கொள்ளவேண்டும். 2024ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டம் வெற்றிபெற்றால்தான் சர்வதேச நாணய நிதியம் இரண்டாம்கட்ட நிதியை விடுவிக்கும் - என்றார். (அ-ம)

## தடைகோரினர்...

விசாரணைகள் மல்லாகம் நீதிவான் காயத்திரி சைலவன் முன்னிலையில் இடம்பெற்றது.

பொலிஸாரின் விண்ணப்பத்தை நிராகரித்த எதிர்மனுதாரர்களின் சட்டத்தரணிகள், இறந்த உறவினர்களை நினைவுகூருவது எவ்விதத்திலும் பயங்கரவாதச் செயலாகாது. பொலிஸாரின் செயற்பாடு கார்த்திகை விளக்கீட்டையும் பயங்கரவாதமாகச் சித்திரிக்கும். கடந்த காலங்களில் இறந்தவர்களின் நினைவேந்தலை அரசாங்கங்கள் அனுமதித்திருந்தன. மேலும் கடந்த காலங்களில் வடக்கு-கிழக்கு நீதிமன்றங்களில் இவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நிராகரிக்கப்பட்டன - என்று மன்றுரைத்தனர். இதையடுத்து, பொலிஸாரின் விண்ணம் தொடர்பான கட்டளைக்காக நவம்பர் மாதம் 20ஆம் திகதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (அ-ம-20-26-125)


வட பகுதி வாடிக்கையாளர்களுக்கு !

Ark Enterprises (Pvt) Ltd
(ஆர்க் என்ரபிறைசஸ் பிறைவேட் லிமிட்டெட்)
ஆகிய நாமத்தைக் கொண்ட எமது நிறுவனம் இனி வரும் காலங்களில் Ark.N.Company (Pvt) Ltd
(ஆர்க். என். கம்பனி பிறைவேட் லிமிட்டெட்)
எனும் நாமத்துடன் முன் எடுத்துச் செல்லப்படும் என்பதனை எமது அன்பர்கள், வாடிக்கையாளர்கள், அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
" இதுவரை எம்மை நேசித்தவர்களே இன்னும் அதிகமாக நம்பிக்கை வையுங்கள் நாங்கள் உங்களோடு."

நிர்வாகம்,
Ark.N. Company (Pvt) Ltd T.P:021 222 4021
150, Stanley Road, Jaffna. 0715357799

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A-9 வீதி முகப்புடன் 51 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

* 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
* நிலப்பரப்பு, நன்னீரூற்று
* 18 அடிப்பாதையுடன்
* சித்த மருத்துவமனைக்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
* யாழ். பஸ்நிலையத்திலிருந்து 6 KM தூரம்
* நல்ல சூழல். குடியிருப்புகள் சூழவுள்ள காணி
* நன்னீர் ஊற்று நிலம்
* தரகர் தேவையில்லை.
* பார்வையிடும் நேரம்: காலை 6.00 - மாலை 6.00 மணிவரை.

தொடர்பு: 071 173 3911
076 853 5022
076 213 7239

(CS 26992) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருட்டு!

முல்லை. நவ. 18

முல்லைத்தீவு, தண்ணீரூற்றுப் பகுதியில் அமைந்துள்ள வணிக நிலையம் ஒன்றில் கடந்த புதன்கிழமை பெருமளவான பொருள்கள் மற்றும் பெருந்தொகைப் பணம் என்பன திருடப்பட்டுள்ளன. வணிக நிலையத்தின் குபேரன் சிலைக்குள் வைக்கப்பட்டிருந்த 5 இலட்சம் ரூபா பணம், பெருந்தொகை சிகரட் மற்றும் பெறுமதியான பொருள்கள் என்பனவே கொள்ளையிடப்பட்டுள்ளன. இது தொடர்பில் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

(ம-19)


### கச்சான் உற்பத்தியாளர்களுக்கு......



சீனாவில் (China) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கச்சான் கோது உடைக்கும் இயந்திரம் 1 மணித்தியாலத்திற்கு 400 kgs மற்றும் 800 kgs உடைக்கக் கூடியது. அத்துடன் கச்சான் பயிருக்கான ஜிப்சம் (Gypsum) $CaSO_4.2H_2O$ தாய்லாந்திலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்டு விற்கப் படுகிறது. விவசாயிகள் வாங்கி பயன்பெறுங்கள்.

**ஆர்க். என். கம்பனி**
102, K.K.S வீதி, யாழ்ப்பாணம் - 021 222 3155
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் - 021 222 4021
A-9 வீதி, பரந்தன்சந்தி, பரந்தன் - 021 228 2020
A-9 வீதி, எழுதுமட்டுவாள் - 070 191 3571



**Hotline - 071 535 7799 / 071 973 9917**

(CS 26985)A-1


## காணவில்லை



யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை ஆறுகால் மடத்தைச் சேர்ந்த

**கந்தசாமி சேகரன் (வயது - 53)**

என்பவரை கடந்த சில நாள்களாகக் காணவில்லை.
இவர்பற்றிய விபரம் தெரிந்தவர்கள் கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்திற்கு அவசரம் தகவல் தருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தொலைபேசி இலக்கம்.
**077 314 6715, 076 875 4429**
தகவல்: குடும்பத்தினர்.


### காணி விற்பனைக்கு /குத்தகைக்கு

A-9 வீதி, சாவகச்சேரி நகரிலுள்ள வர்த்தக நிறுவனங்கள், திருமண மண்டபம் போன்றவை அமைக்கக் கூடிய 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**T.P: 077 6231 025**

### வீட்டு வேலைக்கு பணிப்பெண் தேவை

வீட்டு வேலைகள் செய்வதற்குப் பணிப்பெண் தேவை.
(தங்கி இருப்போர் மட்டும்)
தகுந்த சம்பளம்.

**T.P: 077 8064923**


## 75வது பிறந்தநாள் வாழ்த்துக்கள் அம்மா!

பிறப்பு 18 . 11 . 1948



இறப்பு 07 . 09 . 2021

### அமரர் திருமதி சார்மதிதேவி சொர்ணலிங்கம்

(சாருமதி அக்கா)

**அல்லைப்பிட்டி 02, யாழ்ப்பாணம்**

இறந்துபோன என் அம்மாவுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள்
அம்மா! நீ இவ்வுலகை விட்டுச்சென்றாலும் உன் நினைவுகள்
என்றும் என்னை விட்டு அகலாது. தெய்வம் ஒன்று தாய்வடிவில்
வந்து சென்றது போல் உள்ளதம்மா: உனைப்பிரிந்ததால்
நான் தினமும் தவிக்கின்றேன். வாடுகின்றேன் உனை எண்ணி ஏங்குகின்றேன்.
மீண்டும் மீண்டும் உன் மகனாய் பிறக்க மார்க்கம் ஒன்றைத் தேடுகின்றேன்.

என்ன தவம் செய்தேன் நான் மகனாய் பிறக்க என்ன வரம் பெற்றேன்
நீ என் தாயாய் வந்திட - அன்று நீ நிலவைக்காட்டி சோறு ஊட்டும் போது
எனக்கு தெரியவில்லை அம்மா நீதான் எனை சுற்றிவரும் நிலா என்று - எனக்கு
உயிர் தந்த தேவதையே உனை மறவேன் என் உயிர் உள்ளவரை அம்மா!

உன் அன்பையே எனக்கு அமுதாக்கினாய் பாசம் எனும் சிறகைக்கொண்டு
பாதுகாத்தாய் அல்லும் பகலும் நீ கண்விழித்து என்னை காவல் காத்த
உத்தமியே - நான் எத்தனை பிறவி எடுத்தாலும் என் தாயின் அன்புக் கடனை
தீர்க்க இயலாது அம்மா! நீங்கள் இந்த பூமியில் மலர்ந்த இந்நாளில்
உங்கள் அன்பு மகனின் வாழ்த்துக்களை சமர்ப்பிக்கின்றேன் :
முழு மனதோடு ஏற்றுக்கொள்ளுங்கள் அம்மா!

**பிள்ளைகள்.**

எமது அம்மாவின் பிறந்ததினமான இன்று (18.11.2023) சனிக்கிழமை மதியம் 12.00 மணிக்கு எம்மால் ஆரம்பிக்கப்பட்டுள்ள **அன்னை சாருமதி அறக்கட்டளை** ஊடாக எமது சகோதர அமைப்பான **Good Samaritan Trust - Vavuniya** அவர்களின் அனுசரணையுடன் வவுனியா பன்றிக்கெய்தகுளம் கிராமத்தில் அன்னதானம் வழங்கும் நிகழ்வு நடைபெறும். எமது தாயாரின் பிறந்த தினத்தில் இவ் அறக்கட்டளையை ஆரம்பிக்க உதவிய அனைவருக்கும் குறிப்பாக வெளிநாட்டில் உள்ள நண்பர்கள், உள்நாட்டில் வசிக்கும் பிராந்திய நண்பர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

**நிர்வாகி**
**அன்னை சாருமதி அறக்கட்டளை**

(CS 26989) A-1

## மரண அறிவித்தல்




### செல்வரத்தினம் சின்னம்மா

மண்கும்பான் 4ம் வட்டாரம் கிழக்கை பிறப்பிடமாகவும், மயிலுவீதி, ஆறுகால் மடத்தினை வதிவிடமாகவும் தற்போது இல.47, சபாபதி வீதி, கொக்குவில் கிழக்கில் வசித்தவருமான செல்வரத்தினம் சின்னம்மா கடந்த (13.11.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சிவகாமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற விசாலாட்சியின் பெறாமகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்வரத்தினத்தின் அன்பு மனைவியும், கலைச்செல்வி (இலங்கை), சசிகுமார் (பிரான்ஸ்), ஐங்கரரூபன் (பிரான்ஸ்), கோகுலரூபன் (பிரான்ஸ்), காந்தரூபன் (பிரான்ஸ்), தாரணி (ஜேர்மன்), செல்வரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சந்திரகுமார் (இலங்கை), காலஞ்சென்ற குபேரினி மற்றும் உதயமாலினி (பிரான்ஸ்), பிரசாந்தனி (பிரான்ஸ்), தர்ஷா (பிரான்ஸ்), ரமேஷ் (ஜேர்மன்), ரம்மியா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சவுந்தரம், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், குமாரசாமி, இராசம்மா, புவனேந்திரன், சிவஞானம், சின்னத்துரை, சற்குணாநந்தன் மற்றும் இராசேந்திரம், தையல்நாயகி, நாகராசா, நவரெத்தினம், வீரகத்திப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பராசக்தி, சீதாலட்சுமி, அன்னபூரணம், செல்வராசா மற்றும் சிவபாக்கியம், காலஞ்சென்ற நாகரெத்தினம் மற்றும் இராசமணி, நேசமலர், காலஞ்சென்ற பண்டா மற்றும் இன்பமணி, காலஞ்சென்றவர்களான மேரிரெஜித்தா, சின்னமணி, இராஜேஸ்வரி மற்றும் பிரபானந்தரூபி, செல்வராசா, விஜயலட்சுமி, புஸ்பராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், தர்சிகன் - வோவிதா, நிரோஜன் - ரதிவதனி, சதுர்சிகன் - கஜனி, கௌசிகன் (பிரான்ஸ்), கஸ்தூரி, மதுசாயினி (இலங்கை), சாருகா, ஜெஸ்வின், சசிக்கா (பிரான்ஸ்), விதுர்ஷிகா (பிரான்ஸ்), காவியா, அவந்திகா (பிரான்ஸ்), அகிலாஷ், ரகிலாஸ், ருதீஸ், சர்விகா (ஜேர்மன்), அஸ்விக், அக்ஷயா, அக்ஷிதா, சத்விக், அத்விக் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தர்விதா, தர்ணியா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.11.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**47, சபாபதி வீதி,**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.**

**தகவல்: குடும்பத்தினர்**
**சந்திரகுமார் - 077 2489 134**
**(மருமகன் - இலங்கை)**
**கோகுலரூபன் - 0033651753543**
**(மகன் - பிரான்ஸ்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.